1984 பிப்ரவரி 20]

(85) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1981–82–ஆம் ஆண்டிற்கான பதினேழாம் ஆண்டறிக்கை. (ஆங்கிலம், தமிழ்) [1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

—எதுவுமில்லை—

இணைப்பு

[193ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 90 (14380)—க்ககான விடையைக் காண்க.]

பொறியியல் தொழிலில் ஒப்பந்தத் தொழிலாளர் பணி நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக, 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கொண்ட ஒரு துணைக்குழுவினை அரசு நியமித்தது:—

(1) திரு. எ. கே. நடராசன்.
பொறியியல் கட்டுமானக் கழகம் (வரையறுக்கப் பட்டது)

(2) திரு. வை. பெருமாள், பொதுச் செயலாளர்.
அண்ணா தொழிற்சங்கப் பேரவை.

(3) தொழிலாளர் துறை உதவி ஆணையர் (தலைமையகம்), சென்னை.

2. சென்னை நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள ஒப்பந்தத் தொழிலாளர் பிரச்சனைகள் குறித்து ஆராய்ந்த இக்குழு பின் வருமாறு பரிந்துரைகள் செய்தது:—

(i) இருபதும் அதற்கு மேற்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிறுவனங்களில் அவர்களது பணி நிலைமைகள் மற்றும் ஊதிய வீதங்களை நிர்ணயிக்கும்படி தொழிலாளர் துறை ஆணையாளரைக் கேட்டுக் கொள்ளலாம்.

(அ) தொழிற்சாலையினுள் பொருட்களைக் கையாளுதல்.

(ஆ) வேலை நடந்துக்கொண்டிருக்கும்போது, தூய்மைப் படுத்துதல், பொருட்களை உடைத்தல் அல்லது

1984 பிப்ரவரி 20]

பொருட்களைச் சீர்திருத்துதல்.

(இ) காவலர் மற்றும் காப்பாளர்.

(ஈ) சிற்றுண்டி விடுதி.

(ii) பொறியியல் தொழில்களில் உள்ள பணிகளில் ஒப்பந்தத் தொழிலாளர் நிலை குறித்து மாநில அளவில் ஆராய்வதற்காக வேறொரு துணைக் குழுவினை அமைக்கலாம்.

3. மேற்கண்ட பரிந்துரைகளை ஏற்று, மாநிலத்தில் பொறியியல் தொழில்களில் நிலவும் ஒப்பந்தத் தொழிலாளர் பணி நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக 1981–ஆம் ஆண்டு சனவரித் திங்களில் அரசு ஒரு துணைக் குழுவை அமைத்தது.

4. இத்துணைக்குழு அமைக்கப்படுவதற்கு முன்பே, திருச்சியிலுள்ள பாரதக் கனரக மின் கருவிகள் தொழிலகம் மற்றும் அதன் துணைப் பிரிவுகளில் உள்ள ஒப்பந்தத் தொழிலாளர் நிலை குறித்து ஆராய, 1979 ஆம் ஆண்டு பிப்ரவரித்திங்களில் அரசு ஒரு துணைக் குழுவை அமைத்திருந்தது. இக்குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு:

(1) திரு. ஏ. கே. நடராசன், பொறியியல் தொழில் கட்டுமானக் கழகம் (வரையறுக்கப்பட்டது)

(2) திரு. வை. பெருமாள், பொதுச் செயலாளர், அண்ணா தொழிற்சங்கப்பேரவை, சென்னை.

(3) திரு. எஸ். ராஜாசுப்பிரமணியம், தொழிலாளர் துறைஇணை ஆணையர்.

மேலும் சில உறுப்பினர்களை சேர்த்து இக்குழுவை மாற்றி அமைப்பதன் மூலம் இக்குழுவுக்கு மிகுதியாகப் பிரிதிநிதித்துவம் அளிக்க வழிவகை செறுயுமாறு அடிக்கடி கோரிக்கைகள் எழுப்பப்பட்டன. 29-7-82 அன்று நடந்த எட்டாவது மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவிலும் இது குறித்து விவாதிக்கப்பட்டது. இந்த ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின்படி பாரதக் கனரக மின் கருவிகள் தொழிலகம் மற்றும் துணைப் பிரிவுகளுக்கென அமைக்கப்பட்ட துணைக் அதன் குழுவை ஏற்கெனவே பொறியியல் தொழில் களுக்கென அமைக்கப்பட்டுள்ள துணைக் குழுவுடன் இணைத்தும், மேலும் சில உறுப்பினர்களைச் சேர்த்துக் குழுவிற்கு மேலும் பிரதிநிதித்துவம் அளிக்கும்வகையில் அமைக்கும் செயற்குறிப்பொன்று அரசின் பரிசீலணையில் இருந்து வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS